வெளியீடு எண் 119.

# திருநின்றியூர்த் திருப்பதிகங்கள்



சம்பந்தர்



அப்பர்



சுந்தரர்

தருமபுர ஆதீனம்.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
௨௫-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 119.

உ
குருபாதம்
திருச்சிற்றம்பலம்

# திருநின்றியூர்த் திருப்பதிகங்கள்

இது
திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனம்
உஅ-வது மகாசந்நிதானம்
**ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**
திருவுள்ளத்தின்படி
வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்
**1946.**

சிவமயம்

# பதிப்புரை

திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனம் உசு-வது மகாசந்நிதானம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்** சமய வளர்ச்சி கருதி ஆற்றி வரும் பணிகள் பலவாகும். அவைகளுள் திருப்பதிகங்கள் கொண்ட 274 சிவஸ்தலங்களிலும் ஆதீனச் சார்பில் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, அந்தந்தத் தலப்பதிகங்களையும் ஆங்காங்கு முறைப்படி ஓதுவித்து, ஆராதனை முடிவில் அத்தலப்பதிகங்கள் அடங்கிய புத்தகங்களை அன்பர்கட்கு வழங்குதலும் ஒன்றாகும். ஆதலின் அவர்கள் திருவுள்ளப்பாங்கின்படியே **திருநின்றியூர்த் திருப்பதிகங்கள்** என்னும் இந்நூல் ஆதீன வெளியீடாக வெளிவந்துள்ளது. அன்பர்கள் பதிகங்களைப் பாராயணஞ்செய்து **ஸ்ரீ மகாலட்சுமிநாதர்** திருவருளால் எல்லா நலங்களும் பெற்று உய்வார்களாக.

உ

சிவமயம்

# திருத்தலக் குறிப்பு

சைவசமய பரமாசாரிய மூர்த்திகளாகிய தேவார ஆசிரியர்கள் மூவர்களாலும் அருளிச் செய்யபெற்ற திருப்பதிகங்கள் பெற்று விளங்குந் தலங்கள் நாற்பத்து நான்கனுள் திருநின்றியூர் என்னும் இத்தலமும் ஒன்ருகும். தலமுறை வகுத்த ஸ்ரீ உமாபதி சிவாசாரியார் இதனைப் பத்தொன்பதாவது தலமாக எண்ணிக் கணக்கிட்டுள்ளார். இத்தல ஆலயம் தருமபுர ஆதீனகர்த்தரவர்கள் பரிபாலனத்துக்குட்பட்ட தேவஸ்தானங்களுள் ஒன்ரும். இது தஞ்சை ஜில்லா மாயூரம் தாலுக்காவில் மாயூரமிருந்து சீகாழிசெல்லும் கற்சாலையில் சுமார் 5½கல் தொலைவிலிருக்கிறது. இறைவன் திருநாமம் மகாலட்சுமிநாதர், இறைவி உலக நாயகி,

இது இலக்குமி பூசித்ததலம். நாடோறும் வழிபட்டுவந்த சோழமன்னனுக்கு அவன் கொண்டுவந்த திரி நின்றுவிடவே அப்போது இலிங்கத்தினின்றும் ஒளி தோன்றியதால் திரிநின்றவூர் எனப் பெயர்வந்ததென்பதும் அது பிற்காலத்தில் மருவி திருநின்றவூர் என வழங்குகிறது என்பதும் ஒருவரலாறுகும்.

ஆலயம் கிழக்குபார்த்த கோபுரத்துடன் நாற்புறமும் திருமதில்களால் சூழப்பட்டு விளங்குகிறது. இறைவன் கிழக்கு முகமாக வும் அம்மையார் தெற்கு முகமாகவும் விளங்குகின்றார்.

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே

உ



சிவமயம்

# திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

## பண் – நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

சூலம்படை சுண்ணப்பொடி சாந்தஞ்சுடுநீறு
பாலம்மதி பவளச்சடை முடிமேலது பண்டைக்
காலன்வலி காலினொடு போக்கிக்கடிகமழும்
நீலம்மலர்ப் பொய்கைநின் றியூரின்னிலையோர்க்கே. க

அச்சம்மிலர் பாவம்மிலர் கேடும்மிலரடியார்
நிச்சம்முறு நோயும்மிலர் தாமுந்நின் றியூரில்
நச்சம்மிட றுடையார்நறுங் கொன்றைநயந்தாளும்
பச்சம்முடை யடிகடிருப் பாதம்பணிவாரே. உ

பறையின்னொலி சங்கின்னொலி பாங்காரவுமார
அறையும்மொலி யெங்கும்மவை யறிவாரவர்தன்மை
நிறையும்புனல் சடைமேலுடை யடிகணின்றியூரில்
உறையும்மிறை யல்லதெனது துள்ளம்முணராதே. ௩

பூண்டவ்வரை மார்பிற்புரி நூலன்விரிகொன்றை
ஈண்டவ்வத னோடும்மொரு பாலம்மதியதனைத்
தீண்டும்பொழில் சூழ்ந்ததிரு நின்றியதுதன்னில் 4
ஆண்டகழ றொழிலல்லது வறியாரவரறிவே. ௪

குழலின்னிசை வண்டின்னிசை கண்டுகுயில்கூவும்
நிழலின்னெழி றாழ்ந்தபொழில் சூழ்ந்தநின்றியூரில்
அழலின்வல னங்கையது வேந்தியனலாடும்
கழலின்னொலி யாடும்பரி கடவுள்களைகண்ணே. ௫

மூரன்முறு வல்வெண்ணகை யுடையாளொருபாகம்
சாரன்மதி யதனோடுடன் சலவஞ்சடைவைத்த
வீரன்மலி யழகார்பொழின் மிடையுந்திருநின்றி
யூரன்கழ லல்லாதென துள்ளம்முணராதே. ௬

பற்றியொரு தலைகையினி லேந்திப்பலிதேரும்
பெற்றியது வாகித்திரி தேவர்பெருமானார்
சுற்றியொரு வேங்கையத ளோடும்பிறைசூடும்
நெற்றியொரு கண்ணார்நின்றி யூரின்னிலையாரே. ௭

நல்லம்மலர் மேலானொடு ஞாலம்மதுவுண்டான்
அல்லரென வாவரென நின்றும்மறிவரிய
நெல்லின்பொழில் சூழ்ந்தநின்றி யூரின்னிலையாரெம்
செல்வரடி யல்லாதென சிந்தையுணராதே. ௮

நெறியில்வரு பேராவகை நினையாநினைவொன்றை
அறிவில்சம ணாதருரை கேட்டும்மயராதே
நெறியில்லவர் குறிகண்ணினை யாதேநின்றியூரில்
மறியேந்திய கையானடி வாழ்த்தும்மதுவாழ்த்தே. ௧௦

குன்றம்மது வெடுத்தானுட றோளுந்நெரிவாக
நின்றங்கொரு விரலாலுற வைத்தானின்றியூரை
நன்றார்தரு புகலித்தமிழ் ஞானம்மிகுபந்தன்
குன்றாத்தமிழ் சொல்லக்குறை வின்றிநிறைபுகழே. ௧௧

திருச்சிற்றம்பலம்.



உ

சிவமயம்

# திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம்

## திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

கொடுங்கண் வெண்டலை கொண்டு குறைவிலைப்
படுங்க ணொன்றில ராய்ப்பலி தேர்ந்துண்பர்
நெடுங்கண் மங்கைய ராட்டயர் நின்றியூர்க்
கடுங்கைக் கூற்றுதைத் திட்ட கருத்தரே. க

வீதி வேனெடுங் கண்ணியர் வெள்வளை
நீதி யேகொளப் பாலது நின்றியூர்
வேத மோதி விளங்குவெண் டோட்டராய்க்
காதில் வெண்குழை வைத்தவெங் கள்வரே. உ

புற்றி னாரர வம்புலித் தோல்மிசைச்
சுற்றி னார்சுண்ணப் போர்வைகொண் டார்சுடர்
நெற்றிக் கண்ணுடை யாரமர் நின்றியூர்
பற்றி னாரைப்பற் றுவினை பாவமே. ௩

பறையி னோசையும் பாடலி னோசையும்
மறையி னோசையு மல்கி யயலெலாம் ௰
நிறையும் பூம்பொழில் சூழ்திரு நின்றியூர்
உறையு மீசனை யுள்குமென் னுள்ளமே. ௪

சுனையு ணீலஞ் சுளியு நெடுங்கணாள்
இனைய னென்றென்று பேசுவ தென்கொலோ
நினையுந் தண்வயல் சூழ்திரு நின்றியூர்ப்
பனையி னீருரி போர்த்த பரமரே. ௫

உரைப்பக் கேண்மினு முச்சியு ளான்றனை
நிரைப்பொன் மாமதில் சூழ்திரு நின்றியூர்
உரைப்பொற் கற்றைய ராரிவ ரோவெனில்
திரைத்துப் பாடித் திரிதருஞ் செல்வரே. ௬

கன்றி யூர்முகில் போலுங் கருங்களி
றின்றி யேறல னானிது வென்கொலோ
நின்றி யூர்பதி யாக நிலாயவன்
வென்றி யேறுடை யெங்கள் விகிர்தனே. ௭

நிலையி லாவெள்ளை மாலைய னீண்டதோர்
கொலைவி லாவெயி லெய்த கொடியவன்
நிலையி னார்வயல் சூழ்திரு நின்றியூர்
உரையி னாற்றொழு வார்வினை யோயுமே. ௮

அஞ்சி யாகிலு மன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ
இஞ்சி மாமதி லெய்திமை யோர்தொழக்
குஞ்சி வான்பிறை சூடிய கூத்தனே. ௯

எளிய னாமொழி யாவிலங் கைக்கிறை
களியி னாற்கயி லாய மெடுத்தவன்
நெளிய வூன்றவ லானமர் நின்றியூர்
அளியி னாற்றொழு வார்வினை யல்குமே. ௧௦

திருச்சிற்றம்பலம்.

10



சிவமயம்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகங்கள்

## பண் – நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

அற்றவ னாரடி யார்தமக் காயிழை பங்கினராம்
பற்றவ னாரெம் பராபர ரென்று பலர்விரும்பும்
கொற்றவ னார்குறு காதவ ரூர்நெடு வெஞ்சரத்தால்
செற்றவ னார்க்கிட மாவது நந்திரு நின்றியூரே. க

வாசத்தி னார்மலர்க் கொன்றையுள் ளார்வடி வார்ந்தநீறு
பூசத்தி னார்புக லிந்நகர் போற்றுமெம் புண்ணியத்தார்
நேசத்தி னாலென்னை யாளுங்கொண் டார்நெடு மாகடல்சூழ்
தேசத்தி னார்க்கிட மாவது நந்திரு நின்றியூரே. உ

அங்கையின் மூவிலை வேல ரமர ரடி.பரவச்
சங்கையை நீங்க வருளித் தடங்கடல் நஞ்சமுண்டார்
மங்கையோர் பாக மகிழ்ந்த விடம்வள மல்குபுனற்
செங்கயல் பாயும் வயல்பொலி யுந்திரு நின்றியூரே. ௩

ஆறுகந் தாரங்க நான்மறை யாரெங்கு மாகியடல்
ஏறுகந் தாரிசை யேழுகந் தார்முடிக் கங்கைதன்னை
வேறுகந் தார்விரி நூலுகந் தார்பரி சாந்தமதாம்
நீறுகந் தாருறை யும்மிட மாந்திரு நின்றியூரே. ௪

வஞ்சங்கொண் டார்மனஞ் சேரகில் லார்நறு நெய்தயிர்பால்
அஞ்சுங்கொண் டாடிய வேட்கையி னாரதி கைப்பதியே
தஞ்சங்கொண் டார்தமக் கென்று மிருக்கை சரணடைந்தார்
நெஞ்சங்கொண் டார்க்கிட மாவது நந்திரு நின்றியூரே. ௫

ஆர்த்தவ ராடர வம்மரை மேற்புலி யீருரிவை
போர்த்தவ ரானையின் தோலுடல் வெம்புலால் கையகலப்
பார்த்தவ ரின்னுயிர் பார்படைத் தான்சிர மஞ்சிலொன்றைச்
சேர்த்தவ ருக்குறை யும்மிட மாந்திரு நின்றியூரே. ௬

தலையிடை யார்பலி சென்றகந் தோறுந் திரிந்தசெல்வர்
மலையுடை யாளொரு பாகம்வைத் தார்கற்றுதைந்தநன்னீர்
அலையுடை யார்சடை யெட்டுஞ் சுழல அருநடஞ்செய்
நிலையுடை யாருறை யும்மிட மாந்திரு நின்றியூரே. ௭

எட்டுகந் தார்திசை யேழுகந் தாரெழுத் தாறுமன்பர்
இட்டுகந் தார்மலர்ப் பூசையிச் சிக்கு மிறைவர் முன்னாள்
பட்டுகும் பாரிடைக் காலனைக் காய்ந்து பலியிரந்தூண்
சிட்டுகந் தார்க்கிட மாவது நந்திரு நின்றியூரே. ௮

காலமு ஞாயிறு மாகிநின் றார்கழல் பேணவல்லார்
சீலமுஞ் செய்கையுங் கண்டுகப் பாரடி போற்றிசைப்ப
மாலொடு நான்முக னிந்திரன் மந்திரத் தால்வணங்க
நீலநஞ் சுண்டவ ருக்கிட மாந்திரு நின்றியூரே. ௯

வாயார் மனத்தால் நினைக்கு மவருக் கருந்தவத்தில்
தூயார் சுடுபொடி யாடிய மேனியர் வானிலென்றும்
மேயார் விடையுகந் தேறிய வித்தகர் போந்தவர்க்குச்
சேயா ரடியார்க் கணியவ ரூர்திரு நின்றியூரே. ௧௦

சேரும் புகழ்த்தொண்டர் செய்கை யறுத்திரு நின்றியூரில்
சீருஞ் சிவகதி யாயிருந் தானைத் திருநாவலா
ரூர னுரைத்த வுறுதமிழ் பத்தும்வல் லார்வினைபோய்ப்
பாரும் விசும்புந் தொழப்பர மன்னடி கூடுவரே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

திருவும் வண்மையுந் திண்டிற லரசுஞ்
சிலந்தி யார்செய்த செய்பணி கண்டு
மருவு கோச்செங்க ணான்றனக் களித்த
வார்த்தை கேட்டுன் மலரடி யடைந்தேன்
பெருகு பொன்னிவந் துந்துபன் மணியைப்
பிள்ளைப் பல்கணம் பண்ணையுள் நண்ணித்
தெருவுந் தெற்றியும் முற்றமும் பற்றித்
திரட்டுந் தென்றிரு நின்றியூ ரானே. க

அணிகொ ளாடையம் பூணணி மாலை
அமுது செய்தமு தம்பெறு சண்டி
இணைகொ ளேழெழு நூறிரு பனுவ
லீன்றவன் றிரு நாவினுக் கரையன்
கணைகொள் கண்ணப்ப னென்றிவர் பெற்ற
காத லின்னரு ளாதரித் தடைந்தேன்
திணைகொள் செந்தமிழ் பைங்கிளி தெரியுந்
செல்வத் தென்றிரு நின்றியூ ரானே. உ

மொய்த்த சீர்முந்நூற் றறுபது வேலி
மூன்று நூறுவே தியரொடு நுனக்கு
ஒத்த பொன்மணிக் கலசங்க ளேந்தி
யோங்கு நின்றியூ ரென்றுனைக் களிப்பப்
பத்தி செய்தவப் பரசு ராமற்குப்
பாதங் காட்டிய நீதிகண் டடைந்தேன்
சித்தர் வானவர் தானவர் வணங்குஞ்
செலவத் தென்றிரு நின்றியூ ரானே. ௩

இரவி நீள்சுட ரெழுவதன் முன்னம்
எழுந்து தன்முலைக் கலசங்க ளேந்திக்
கரபி பால்சொரிந் தாட்டிநின் பாதம்
தொடர்ந்த வார்த்தை திடம்படக் கேட்டுப்
பரவி யுள்கிவன் பாசத்தை யறுத்துப்
பரம வந்துநுன் பாதத்தை யடைந்தேன்
நிரவி நித்தில மத்தகு செம்பொன்
அளிக்குந் தென்றிரு நின்றியூ ரானே

வந்தோ ரிந்திரன் வழிபட மகிழ்ந்து
வான நாடுநீ யாள்கென அருளிச்
சந்தி மூன்றிலும் தாபர நிறுத்திச்
சகளி செய்திறைஞ் சகத்தியர் தமக்குச்
சிந்து மாமணி யணிதிருப் பொதியிற்
சேர்வு நல்கிய செல்வங்கண் டடைந்தேன்
செந்தண் மாமலர்த் திருமகள் மருவுஞ்
செல்வத் தென்திரு நின்றியூ ரானே. ரு



காது பொத்தரைக் கின்னர ருழுவை
கடிக்கும் பன்னகம் பிடிப்பருஞ் சீயம்
கோதின் மாதவர் குழுவுடன் கேட்பக்
கோல ஆல்நிழற் கீழறம் பகர
ஏதஞ் செய்தவ ரெய்திய வின்ப
மியானுங் கேட்டுநின் னிணையடி யடைந்தேன்
நீதி வேதியர் நிறைபுக ழுலகில்
நிலவு தென்திரு நின்றியூ ரானே. சா

கோடு நான்குடைக் குஞ்சரங் குலுங்க
நலங்கொள் பாதநின் றேத்திய பொழுதே
பீடு விண்மிசைப் பெருமையும் பெற்ற
பெற்றி கேட்டுநின் பொற்கழ லடைந்தேன்
பேடை மஞ்ஞையும் பிணைகளின் கன்றும்
பிள்ளைக் கிள்ளையு மெனப்பிறை நுதலார்
நீடு மாடங்கள் மாளிகை தோறும்
நிலவு தென்திரு நின்றியூ ரானே. ௭



திருச்சிற்றம்பலம்.

ஞானசம்பந்தம் பிரஸ், தருமபுரம். C. 500.

கொடுங்கோளூர் அஞ்சைக் களஞ்செங் குன்றூர்
கொங்கணங் குன்றியூர் குரக்குக் காவும்
நெடுங்களம் நன்னிலம் நெல்லிக் காவும்
நின்றியூர் நீடூர் நியம நல்லூர்
இடும்பா வனமெழுமூர் எழூர் தோழூர்
எறும்பியூர் ஏராரு மேம கூடங்
கடம்பைஇளங் கோயில் தன்னி னுள்ளுங்
கயிலாய நாதனையே காண லாமே. —அப்பர்.

## மூவர் தோத்திரம்.

அடலமணைக் கழுவேற்றும் திருஞான
சம்பந்த ரடிகள் போற்றி
கடலிடைக்கற் றூண்மிதப்ப ஓதுதமிழ்க்
கடலினடிக் கமலம் போற்றி
மடலவிழ்பூங் குழற்பரவை வாசலினம்
இறைஇருதாள் வருந்த மீண்டும்
தொடர்வருந்து தெனவிடுத்த சுந்தரன்பொற்
றூமறையார் துணைத்தாள் போற்றி.